**A1 and A2 present.**
**15.09.2025**
**CC.No. 312/2019**
அரசு தரப்பு சாட்சி **-3-** அய்யம்மாள்
முதல் விசாரணை தொடர்ச்சி

நான் இந்த வழக்கில் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளேன். வெள்ளை நிற உரசாக்குப்பையுடன் வந்த சிவனேசன், புஷ்பம் இருவரையும் ரகசிய தகவலாளி அடையாளம் காண்பித்து விட்டு மறைந்தார். பின்னர் சார்பு ஆய்வாளரும், நானும் போலீஸ்பார்ட்டியுடன் இருந்த 1108-லாரன்ஸ் இவர்களை நிறுத்தி சுய அறிமுகம் செய்துகொண்டோம். தாங்களை சோதனையிட வேண்டுமென்று அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. தாங்கள் விரும்பினால் அருகில் உள்ள குற்றவியல் நடுவர் அவர்களிடம் அல்லது அருகில் உள்ள அரசு பதிவு பெற்ற அதிகாரியிடம் அழைத்து சென்று சோதனையிட உரிமை உண்டு என்று கூறினோம். அவர்கள் தாங்கள் எங்கும் அழைத்து செல்ல விருப்பமில்லை தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார்கள். அந்த நடைபாதையை கடந்து சென்ற மணிகண்டன் மகன் கருப்பசாமி, பாண்டியராஜ் , த/பெ. ராமசாமி இருவரையும் அழைத்து விபரம் கூறி சாட்சிகளாக இருக்க அழைத்தோம். தாங்களுக்கு அவசர வேலையிருப்பதாக சாட்சிகளாக இருக்க மறுத்துவிட்டனர். பின்னர் போலீஸ்பார்ட்டியில் இருந்த என்னையும், தலைமைக்காவலர்-1108-லாரன்ஸ் என்பவரையும் சாட்சிகளாக இருக்கும்படி சோதனை சம்மத கடிதம் 09.50 முதல் 10.30 மணி வரை தயார் செய்து அதில் சிவனேசன்,புஷ்பம் இருவரிடமும் கையொப்பம் பெற்று நாங்களும் கையொப்பம் செய்தோம். பின்னர் அவர்கள் வைத்திருந்த வெள்ளை நிற உரசாக்குப்பையை பிரித்து பார்த்தபோது அதில் உலர்ந்த கஞ்சா இருப்பது தெரியவந்தது. அதை நாங்கள் கொண்டுசென்ற எலக்ட்ரானிக் தராசில் எடைபோட்டபோது 1.500கிலோகிராம் இருந்தது. சாட்சிகளான எங்கள் முன்னிலையில் பகுப்பாய்வுக்காக தலா 25கிராம் வீதம் இரண்டு காக்கி நிற கவரில் அதே எலக்ட்ரானிக் தராசில் எடைபோட்டு இரண்டு காக்கிநிற உரப்பையில் S1, S2 குறியீடு கொடுத்து NIB சீல் வைக்கப்பட்டது. மீதம் உள்ள 1.450கிலோகிராம் கஞ்சாவை அதே உரசாக்குபையில் வைத்து கட்டி P1 என குறியீடு கொடுத்து NIB சீல் வைக்கப்ப்படடது. மேற்படி கஞ்சாவை சாட்சிகளான எங்கள்

முன்னிலையில் 10.30 மணி முதல் 11.10 வரை அத்தாட்சியில் கைப்பற்றி அதில் நாங்களும் , சிவனேசனும் கையொப்பம் இட்டோம். பின்னர் அரசு அனுமதியின்றி கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக சிவனேசன், புஷ்பம் இருவரையும் 11.20 மணிக்கு கைது செய்து , கைது செய்தது பற்றி அவருக்கும், அவர்கள் உறவினர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. 11.20 மணி முதல் 12.00 மணி வரை எந்த ஆசைவார்த்தைகளோ, துன்புறுத்தலோ இல்லாமல் சிவனேசன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. 12.30 மணிக்கு கஞ்சா மற்றும் எதிரிகள் சிவனேசன், புஷ்பம் இருவரையும் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவிற்கு அழைத்து சென்று வழக்கு பதிவு செய்து குற்ற எண்.67/2019, ச/பி.8(c) r/w 20(ii)(b)(B) NDPS ACT படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. சார்பு ஆய்வாளர் -சதீஷ்குமார் அவர்களுக்கு உதவியாக இருந்தேன்.

**குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடைபெற்றபோது தேனி மாவட்ட ஆயுதப்படை பிரிவில் முதல்நிலை காவலராக பணியில் இருந்தேன் என்றால் சரிதான். எங்களுடைய உயர் அதிகாரி தேனி நுண்ணறிவு பிரிவுக்கு எத்தனை மணிக்கு செல்ல அறிவுறுத்தினார் என்றால் 7.30 மணிக்கு தகவல் கூறினார்கள் நான் 8.00 மணிக்கு சென்றேன். எங்களது ஆயுதப்படைபிரிவில் இருந்து செல்லும்போது கடவு சீட்டு கொடுத்துத்தான் மேற்படி தேனி நுண்ணறிவு பிரிவு காவல்நிலையத்திற்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் யார் கடவு சீட்டு கொடுத்தார்கள் என்றால் ஆயுதப்படைபிரிவில் சார்பு ஆய்வாளர் கடவு சீட்டு கொடுத்தார். தேனி நுண்ணறிவு பிரிவு காவல் நிலையத்திற்கு சென்றபோது அந்த காவல்நிலைய ஆய்வாளர் அங்கிருந்தாரா என்றால் இல்லை. அந்த கடவு சீட்டை யாரிடம் கொடுத்தேன் என்றால் சார்பு ஆய்வாளர் -சதீஷ் அவர்களிடம் கடவுச்சீட்டை கொடுத்தேன். கடவு சீட்டு இல்லை என்றால் நான் மேற்படி காவல்நிலையத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான். வழக்கின் தகவலை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தேனி பழைய இரயில்நிலைய ரோடு தேனி நுண்ணறிவு பிரிவு காவல்நிலையத்திலிருந்து சுமார் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 2கிலோ மீட்டர் இருக்கும். அந்த ரோடுக்கு சுந்தரம் தியேட்டர்ரோடு என்று சொல்வார்கள் என்றால் எனக்கு தெரியாது. பழைய இரயில் நிலைய ரோடு தென் -வடலாக செல்கிறதா அல்லது

கிழ-மேலாக செல்கிறதா என்றால் கிழ-மேலாக செல்கிறது. தேனியிலிருந்து பெரியகுளம் செல்லும் ரோட்டில் பெத்தனாச்சிவிநாயகர் கோயில் முன்பாக இடது பக்கமாக சென்றால் மேற்படி இரயில்வே ரோடு என்றால் சரிதான். அந்த ரோட்டில் ஆரம்ப சுகாதார நிலையம் தேனி வி.ஏ.ஓ அலுவலகம் உள்ளது என்றால் சரிதான். தனிநபர் சாட்சியாக இருக்க வி.ஏ.ஓ அலுவலகத்தில் சார்பு ஆய்வாளர் யாரையும் அழைத்தாரா என்றால் எனக்கு தெரியாது. அந்த ரோட்டில் வீடுகள் கடைகள் வரிசையாக, நிறைய உள்ளது என்றால் சரிதான். நான் கையொப்பம் போட்டதாக சொல்லும் ஆவணங்களில் யாருடைய வீட்டின் முன்பு அல்லது யாருடைய கடையின் முன்பு மேற்படி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்று அந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. நான் கையொப்பம் இட்டதாக சொல்லப்படும் ஆவணங்கள் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்ட படிவமா அல்லது கையால் எழுதப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை. மொத்தம் அந்த இடத்தில் எவ்வளவு நேரம் இருந்திருப்போம் என்றால் இரண்டரைமணிநேரம் இருந்திருப்போம். ஆவணங்களில் இரண்டுபேரும் ஆங்கிலத்தில் கையொப்பம் இட்டார்களா அல்லது தமிழில் கையொப்பம் இட்டார்களா என்றால் தெரியவில்லை. சோதனை சம்மத கடிதம் தயார் செய்த பின்பு எதிரிகளுக்கு சோதனை உரிமம் சொல்லப்பட்டதாக அல்லது அதற்கு முன்பாகவே சோதனை உரிமம் சொல்லப்பட்டதா என்றால் மேற்படி ஆவணத்தை தயார் செய்யப்பட்டபின்னர் தான் கூறப்பட்டது. இரண்டுபேர்களுக்கும் தனித்தனியே சோதனை சம்மத கடிதம் தயார் செய்யப்பட்டதா என்றால் இல்லை. இரண்டு எதிரிகளுக்கும் சார்பு ஆய்வாளர் சோதனை உரிமத்தை கூறினார் என்றால் சரிதான். எதிரிகளை நான் சோதனை செய்தேனா என்றால் சோதனை செய்யவில்லை அவர்கள் வைத்திருந்த பையை தான் சோதனை செய்தேன். இரண்டு நபர்களும் ஆளுக்கொரு பை வைத்திருந்தார்களா என்றால் சிவனேசன் மட்டும் பை வைத்திருந்தார். எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் பையில் என்ன விபரம் எழுதியிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகளை சம்பவ இடத்தில் வைத்து நாங்கள் சோதனை செய்தோமா என்றால் இல்லை. பொருட்களை நிறுத்து எடைபோட்டது யார் என்றால் பாஸ்கரன்-1681 என்ற தலைமைக்காவலர் எடைபோட்டார். அத்தாட்சியில் NIBசீல் வைக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் தயார் செய்ததாக சொல்லப்படும் சோதனை

சம்மத கடிதம், அத்தாட்சி, கைது செய்வதற்காக காரணம் சொல்லும் கடிதம், ஆய்வு நமூனா ஆகியவற்றில் யார், யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் நானும், லாரன்ஸ் என்ற தலைமைக்காவலரும் கையொப்பம் செய்தோம். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்னநேரத்தில் சார்பு ஆய்வாளர்-சதீசுடன் சேர்ந்து சம்பவ இடத்திற்கு கண்காணிப்புக்கு செல்லவில்லை என்றும், சம்பவ இடத்தில் எதிரிகளை பார்க்கவில்லை என்றாலும் அவர்களிடம் உரிமை அறிவிப்பு எதுவும் வழங்கவில்லை என்றும் அவர்களிடம் இருந்து போதைப்பொருள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. அவர்களை சொன்ன இடத்தில் சொன்னதுபோல் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் பின்னிட்டு தயார் செய்யப்பட்டு தேனி நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன் பேரில் அந்த ஆவணங்களில் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பமிட்டு அதனை அனுசரித்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றியதாக சொல்லப்படும் சொத்துக்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி

தென்மாவட்ட இனக்கலவர வழக்குகள்

விசாரணை நீதிமன்றம், மதுரை.